# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | |
|---|---|---|
| Case No | : | CC.No.43/2021 |
| Deposition of Witness for | : | P.W.1 |
| Name | : | மோனோராஜா |
| Father/Husband Name | : | சம்பத் |
| Village | : | டி.பி.சாலை |
| Taluk | : | சங்ககிரி |
| Caste | : | SC |
| Calling | : | திருவேணி மாருதிகார் கம்பனி |
| Religion | : | இந்து |
| Age | : | 24 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.12.2021.

16.12.2021 – முதல் விசாரணை :

நான் தற்போது சங்ககிரி டி.பி சாலையில் குடியிருந்து திருவேனி மாருதி கார் கம்பனியில் வேலை செய்துவருகிறேன். கடந்த 29.06.2020 -ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் சங்ககிரி பழைய பேருந்துநிலையம், புவனேஸ்வரி மருத்துவமனை அருகேயுள்ள எனது நண்பன் சஜீத் என்பவரின் வீட்டிற்கு நான் எனது இருசக்கரவாகனத்தில் சென்று எனது இருசக்கரவாகனத்தை சஜீத்தின் வீட்டிற்கு முன்பாக நிறுத்திவிட்டு வீட்டிற்குள் சென்று பேசிக்கொண்டிருந்தேன். எனது இருசக்கரவாகனத்தின் பதிவெண் TN 52 K 5826, TVS Appache வாகனமாகும். பின்னர் மதியம் சுமார் 01.30 மணியளவில் வெளியே வந்துபார்த்தபோது, நான் நிறுத்தியிருந்த இருசக்கரவாகனத்தை காணவில்லை. எனவே அக்கம்பக்கத்தில் விசாரித்து தேடிப்பார்த்தேன். ஆனால் வாகனம் கிடைக்கவில்லை. எனவே 29.06.2020 -ம் தேதி சங்ககிரி காவல்நிலையம் வந்து வாகனத்தைகண்டுபிடித்து தருமாறு புகார்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். புகார் அ.சா.ஆ.1 ஆகும். பின்னர் அன்றையதினம் மாலை போலீசார் என்னை தொடர்புகொண்டு இருசக்கரவாகனத்தை கண்டுபிடித்துவிட்டதாக கூறினார்கள். தகவலின்பேரில் நான் காவல்நிலையத்திற்கு சென்றபோது, ஆஜர் எதிரிகள் இருவரும் அங்கிருந்தார்கள். அவர்கள்தான் வாகனத்தை திருடிச்சென்றதாக போலீசார் என்னிடம் தெரிவித்தார்கள். நான் போலீசாரிடம் எனதுவாகனத்தை அடையாளம் காண்பித்தேன். பின்னர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து எனது இருசக்கரவாகனத்தை இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள

வாகனம் காணாமல் போன இருசக்கரவாகனமாகும். புகைப்படம் (இரண்டு எண்ணிக்கை) அ.சா.ஆ.2 வரிசை ஆகும். எனது வாகனத்தை இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளேன். TN 52 K 5826 என்ற பதிவெண்கொண்ட TVS Appache இருசக்கரவாகனம் சா.பொ.1 ஆகும். இதுகுறித்து போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்குவிசாரணை-(எதிரிகள்தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யவில்லை)

Sd/-Mohanaraja

Sd/-T.Sundarrajan, 16.12.2021
Judicial Magistrate No.I, Sankari.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | |
|---|---|---|
| Case No | : | CC.No.43/2021 |
| Deposition of Witness for | : | P.W.2 |
| Name | : | நவீன் |
| Father/Husband Name | : | நடராஜன் |
| Village | : | புவனேஸ்வரி மருத்துவமனை |
| Taluk | : | சங்ககிரி |
| Caste | : | ST |
| Calling | : | பாரத்கேஸ் நிறுவனம் |
| Religion | : | இந்து |
| Age | : | 26 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.12.2021.

<u>16.12.2021 – முதல் விசாரணை :</u>

நான் தற்போது சங்ககிரி புவனேஸ்வரி மருத்துவமனை அருகே குடியிருந்து, பாரத் கேஸ் நிறுவனத்தில் விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள முதலவாது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 29.06.2020 -ம் தேதி மதியம் சுமார் 01.30 மணியளவில் அ.சா.1 மோகனராஜ் என்னிடம் வந்து நிறுத்தியிருந்த இருசக்கரவாகனம் காணாமல் போனதாககூறி விசாரித்தார். நான் காலையில் அ.சா.1 கூறிய அப்பாச்சி வாகனத்தை பார்த்தேன். பின்னர் நானும், அ.சா.1 -ம் அருகில் இருசக்கரவாகனத்தை தேடிப்பார்த்தோம் ஆனால் கிடைக்கவில்லை. பின்னர் அ.சா.1 போலீசில் புகார்கொடுத்தார். அதனைத்தொடர்ந்து போலீசார் மாலை 03.30 மணியளவில் சம்பவஇடத்திற்கு வந்து என்னிடம் வாகனம் நிறுத்தியிருந்த இடம் குறித்து விசாரித்தனர். நான் அடையாளம் காட்டினேன். பின்னர் அவ்விடத்தை பார்வையிட்டு போலீசார் படம் வரைந்துகொண்டனர். அப்போது நானும், சஞ்சீபி என்பவரும் உடனிருந்து சாட்சி கையெழுத்து செய்துகொடுத்தோம். பார்சைமகஜர் அ.சா.ஆ.3 ஆகும். இதுகுறித்து போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்குவிசாரணை</u>-(எதிரிகள்தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யவில்லை)

Sd/-Naveen

Sd/-T.Sundarrajan, 16.12.2021
Judicial Magistrate No.I, Sankari.